தினமணி
நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**விவசாயிகளுக்கு நேரடியாக மானியம் வழங்க வலியுறுத்தல்**

First Published : 23 Aug 2011 11:13:07 AM IST

பெரம்பலூர், ஆக. 22: விவசாயிகளுக்கு நேரடியாக மானியம் வழங்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென விவசாய இடுபொருள் வியபாரிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

பெரம்பலூரில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இந்தச் சங்கத்தின் மாவட்டப் பொதுக்குழுக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

விவசாய இடுபொருள்களுக்கான 4 சத வாட் வரியை நீக்கியதற்கும், பெரம்பலூர் மாவட்டத்துக்கு தேவையான விவசாய இடுபொருள்களை தொடர்ந்து வழங்கி வரும் தமிழக முதல்வருக்கும் நன்றி தெரிவிப்பது.

மத்திய அரசு அறிவித்துள்ள நேரடி பண மானியம், வியபாரிகளைப் பாதிக்கும் சூழ்நிலை உள்ளது. இதனால், அதிக முதலீடு தேவைப்படும் நிலையில் வியபாரம் பாதிக்கப்பட்டு வருகிறது. எனவே, விவசாயிகளுக்கு நேரடியாக மானியத்தை வழங்க மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்துக்கு சங்கத்தின் மாவட்டத் தலைவர் வி. வேணுகோபால் தலைமை வகித்தார். மாவட்டச் செயலர் ஜே. பாலகிருஷ்ணன், மாவட்டப் பொருளாளர் எஸ். சேகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பெரம்பலூர் மாவட்ட வேலாண் இணை இயக்குநர் எஸ். சிவக்குமார், விவசாய இடுபொருள் வியபாரிகள் சங்க மாநிலப் பொருளாளர் சி. சண்முகநாதன் ஆகியோர் பேசினர்.

கூட்டத்தில் மண்டல நிர்வாகிகள் என். ராமசாமி, பொன்னுசாமி, செயற்குழு உறுப்பினர்கள் ஜி. ஜெயப்பிரகாஷ், எஸ். நாராயணசாமி, ஆர். அசோக், சி. கந்தசாமி, பி. கணேசன், வி.சி. அருணாசலம், எஸ். கோபாலகிருஷ்ணன், பி.கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

முன்னதாக மாவட்டத் துணை தலைவர் கே. ராஜேந்திரன் வரவேற்றார். மண்டலத் தலைவர் பி. ராஜவேல் நன்றி கூறினார். மதுரையில் தமிழ்ச் சங்கம் தோன்றியது ஏன்?

**மானிய விலையில் ஜிப்சம் பெறலாம்**

First Published : 23 Aug 2011 11:12:34 AM IST

பெரம்பலூர், ஆக. 22: பெரம்பலூர் வட்டாரத்தைச் சேர்ந்த விவசாயிகள் மானிய விலையில் ஜிப்சம் பெற்று பயன் பெறலாம் என்றார் வேளாண் உதவி இயக்குநர் எம். செந்தமிழ்செல்வன்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

வேளாண்துறை மூலம் பெரம்பலூர் வட்டாரத்தில் உள்ள பெரம்பலூர், அம்மாபாளையம் விரிவாக்க மையங்களில் விதைகள் போதுமான அளவு இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

இதில் சம்பா பட்டத்தில் சாகுபடி செய்யப்படும் நெல் ரகமான வெள்ளை பொன்னி கிலோ ரூ. 27 வீதம் விற்பனை விலையில் ரூ. 5 மானியம் நீங்கலாக ரூ. 22-க்கு விற்பனை செய்யப்படுகிறது.

நெல் நடவுக்கு முன்னர் தழைச்சத்து உபயோகத்தைக் குறைக்க, தக்கை பூண்டு விதைப்பு செய்து பூக்கும் முன் மடக்கி வயலை உழவு செய்ய வேண்டும். இதற்கு தேவையான தக்கை பூண்டு விதைகள் 50 சத மானியத்தில் விவசாயிகளுக்கு விநியோகம் செயய்யப்டுகிறது.

மானாவாரி பயிராக சுமார் 10 ஆயிரம் ஏக்கரில் மக்காசோளம் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இதில் மானாவாரி நில மேம்பாட்டுத் திட்ஹடத்தின் கீழ், மக்காசோளம் சாகுபடி மற்றும் காய்கறி சாகுபடி செய்ய ஆர்வமுள்ள விவசாயிகளுக்கு 25 சத மானியத்தில் மக்காசோள விதை, உரம், நுண்சத்து, பூச்சிமருந்து வழங்கப்பட்டு வருகிறது. மக்காசோளம் மற்றும் மக்காசோளத்துக்கு பின் காய்கறி பயிர் மானாவாரியில் சாகுபடி செய்ய ஆர்வமுள்ள விவசாயிகள் வேளாண் துறையை அணுகி இடுபொருள்களை பெற்றுக்கொள்ளலாம்.

பெரம்பலூர் வட்டாரத்தில் 350 ஏக்கரில் நிலக் கடலை சாகுபடி செய்யப்பட்டு, வளர்ச்சி மற்றும் பூக்கும் தருணத்தில் உள்ளது. இந்தச் சமயத்தில் மேலுராமாக ஏக்கருக்கு 80 கிலோ ஜிப்சம் இட வேண்டும். ஜிப்சம் இடுவதால், மண் பொல பொலப்பாகி, விழுதுகள் மண்ணில் நன்கு இறங்கி அதிகளவு காய்கள் பிடிக்க ஏதுவாகிறது. மேலும், திரட்சியான கடலை உருவாகவும், எண்ணெய் மற்றும் புரதசத்தின் அளவு அதிகரித்து அதிக விளைச்சல் பெறவும் ஜிப்சம் உதவுகிறது. இந்தத் தருணத்தில் இட வேண்டிய ஜிப்சம் 50 சத மானியத்தில் அம்மாபாளையம் வேளாண் விரிவாக்க மையத்தில் வழங்கப்படுகிறது.

எனவே, ஜிப்சம் மற்றும் பொன்னி நெல் தேவைப்படும் விவசாயிகள் வேளாண் விரிவாக்க மையத்தில் மானிய விலையில் பெற்று பயன் பெறலாம் என்றார் அவர்.

**விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

First Published : 23 Aug 2011 11:12:23 AM IST

பெரம்பலூர், ஆக. 22: பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் ஆக. 25-ம் தேதி நடைபெறுகிறது என்றார் மாவட்ட ஆட்சியர் (பொறுப்பு) எம்.ஏ. சுப்பிரமணியன்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் ஆக. 25-ம் தேதி முற்பகல் 11 மணிக்கு மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெறுகிறது.

மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் வேளாண்மை தொடர்பான நீர்ப்பாசனம், கடன் உதவி, இடுபொருள்கள், இயந்திரங்கள், விவசாயிகளின் மேம்பாட்டுக்கான நலத் திட்டங்கள் குறித்து விவாதிக்கப்பட உள்ளது.

எனவே, இந்தக் கூட்டத்தில் விவசாயிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் பங்கேற்று பயன் பெறலாம் என்றார் அவர்.

**விவசாயிகள் பணப் பயிர்களையும் சாகுபடி செய்ய வேண்டும்**

First Published : 23 Aug 2011 11:47:07 AM IST

திருவாரூர், ஆக. 22: திருவாரூர் மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் நெல் சாகுபடியோடு பணப் பயிர்களையும் சாகுபடி செய்ய வேண்டும் என்றார் மாவட்ட ஆட்சியர் ச. முனியநாதன்.

திருவாரூர் மாவட்டத்தில் வேளாண் பணிகள் குறித்து அண்மையில் நேரில் பல்வேறு இடங்களில் ஆட்சியர் ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது, நீடாமங்கலத்தில் உள்ள வேளாண் அறிவியல் ஆராய்ச்சி மையத்தைப் பார்வையிட்ட ஆட்சியர், அங்கு திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்த நெல் சாகுபடியைப் பார்வையிட்டு, அதன் முறைகள் குறித்து கேட்டறிந்தார்.

பின்னர், அங்கு நன்னீரில் வளர்க்கப்பட்டு வரும் மீன்கள் மற்றும் நாட்டுக்கோழி, வான்கோழி உள்ளிட்டவற்றைப் பார்வையிட்டு, அதன் வளர்ப்பு முறைகள் குறித்து ஆட்சியர் கேட்டறிந்தார்.

இதைத் தொடர்ந்து, மன்னார்குடியில் உள்ள வேளாண் அலுவலகத்தில் 20 விவசாயிகளுக்கு ரூ. 5 லட்சம் மதிப்பில் வேளாண் இடுபொருள்களை ஆட்சியர் வழங்கினார்.

நெடுவாக்கோட்டையில் 20 ஏக்கரில் திருந்திய நெல் சாகுபடி செய்துள்ள விவசாயி அருண்குமாரின் வயலைப் பார்வையிட்டு, அதன் தொழில்நுட்பங்கள் குறித்து கேட்டறிந்தார்.

இலக்கணம்பேட்டை ஊராட்சியில் சொட்டு நீர் பாசன முறையில் கரும்பு சாகுபடி செய்துள்ள வயலையும், அதே பகுதியில் வெங்காயம், புடலங்காய், கத்தரி, சுரைக்காய், மிளகாய் சாகுபடி

செய்யப்பட்ட வயல்களையும், கூப்பாச்சிக்கோட்டை ஊராட்சியில் எண்ணெய் பனை சாகுபடி செய்துள்ள வயலையும், மரத்திலிருந்து அறுவடை செய்யப்பட்ட காய்களையும் ஆட்சியர் பார்வையிட்டு, சாகுபடி முறைகளையும், சாகுபடி செலவு மற்றும் மகசூல் குறித்தும் கேட்டறிந்தார்.

பின்னர் அவர் கூறியது:

திருவாரூர் முழுமையான விவசாய மாவட்டமாக இருந்தாலும், பொருளாதார ரீதியில் முன்னேற்றமடையாததற்கு உயரிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தாததே காரணம். எனவே, விவசாயிகள் உரிய முறையில் தொழில்நுட்பங்களைக் கடைபிடித்து, புதிய உத்திகளுடன் விவசாயத்தை மேற்கொள்ள வேண்டும். அதேபோல, நெல் சாகுபடியுடன் பணப் பயிர்கள் சாகுபடியையும் விவசாயிகள் மேற்கொண்டால், பொருளாதார ரீதியில் முன்னேற்றம் அடையலாம் என்றார் அவர்.

ஆய்வின் போது, வேளாண் இணை இயக்குநர் எஸ். மயில்வாகனன், துணை இயக்குநர் கபிலன், உதவி இயக்குநர்கள் நடேசன், விஜயகுமார், சிவக்குமார் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

---

தினமலர்

**ஒருங்கிணைந்த மீன் வளர்ப்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 24,2011,00:00 IST

**நவீன தொழில்நுட்பம்**

நன்னீர் மீன் வளர்ப்பினை ஒருங்கிணைந்த மீன் வளர்ப்பின் அடிப்படையில் மேற்கொண்டால் நல்ல வருமானம் ஈட்டிடலாம். மீன் வளர்ப்புடன் நெற்பயிர், கால்நடைகள் மற்றும் கோழி, வாத்து ஆகிய பறவையினங்களையும் சேர்த்து வளர்த்திட்டால் கூடுதல் வருமானம் பெற்றிடலாம் என்பதை ஆராய்ச்சி மூலம் கண்டறிந்து மீன், கால்நடை, கோழி, வாத்து போன்றவைகளை ஒருங்கிணைத்து வளர்ப்பதன் மூலம் அதிகலாபம் பெறலாம்.

**நெற்பயிரோடு மீன் வளர்ப்பு**: நெல் வயல்களில் நாற்று நட்டது முதல் அறுவடை வரை நெற்பயிரோடு மீன் வளர்த்தல் முறை, நெல் அறுவடைக்குப் பின் மழை காலங்களில் பெருமளவு நீர் வயல்களில் நிரப்புவதால் அவற்றில் மீன் வளர்த்தல் மற்றொரு முறை. பொதுவாக வயல்களில்

நெல், உளுந்து, கேழ்வரகு என்ற பயிர் சுழற்சியையே நாம் அறிவோம். ஆனால் வெவ்வேறு இடங்களின் சூழ்நிலைக்கேற்ப ஒருமுறை நெல்லும் மறுமுறை மீனும் வளர்த்து நிலத்தையும் நீரையும் முழுமையாகப் பயன்படுத்துதல் ஒரு புதுமுறை சுழற்சி எனலாம். இம்முறை பயிர்- மீன் சுழற்சியால் அதிக பயனடைவதோடு பயிர்களை தாக்கும் பூச்சி புழுக்களையும் களைகளையும் கட்டுப்படுத்தலாம்.

நெல்வயல்களில் வளரும் மீன்கள் நிலத்தை தொடர்ந்து கிளறிவிடுவதோடு, மீனின் கழிவில் நிறைந்துள்ள தழைச்சத்து பயிர்களுக்கு தொடர்ந்து கிடைக்கின்றது. நெல் மணியோடு விலை குறைந்த புரதம் நிறைந்த மீனும் கிடைப்பதால் புரதப்பற்றாக்குறை நீங்குகிறது.
நெல்லையும் மீனையும் சேர்த்து வளர்க்க, விளையும் வயல்களில் குறைந்தது நான்கைந்து மாதங்களாவது நீர் தேங்கி இருக்க வேண்டும். இவ்வகை வயல்களின் வரப்புகள் உறுதியாகவும் உயரமாகவும் இருப்பது அவசியம்.

வயலின் பள்ளமான பகுதிகளில் ஆழமான குளங்களும் அவற்றிலிருந்து பிரிந்து செல்லும் பல வாய்க்கால்களும் அமைத்தால் வயலின் நீர் குறைந்து தரைமட்டத்தை அடையும் காலங்களில் மீன்கள் மடிந்துபோகாமல் வாய்க்கால்கள் வழியாக குளத்தை வந்தடைந்து பிழைக்கக்கூடும். வாய்க்கால்கள் 50 செ.மீ. அகலமும், 30 செ.மீ. ஆழமும் கொண்டதாய் இருக்க வேண்டும். வயலுக்கு நீர் பாய்ச்சும் வழியின் மூலமாகவும், வெளியேறும் வழி மூலமாகவும் மீன்கள் தப்பிச்செல்வதை தடுக்க வலைகளைப் பொருத்த வேண்டும்.

மேற்கூறிய வசதிகளைக் கொண்ட வயல்களில் உறுதியான வேர்களுடன் குறைந்த வெப்பத்தையும், தேங்கி நிற்கும் நீரையும் தாங்கக்கூடிய நீண்ட காலப்பயிர்களை பயிரிடலாம். நெற்பயிரின் நடவுக்குப் பின் விரலளவு மீன் அல்லது அதற்கு மேல் வளர்ந்த மீன்களை நெல்வயல்களில் எக்டருக்கு 2000 வரை இருப்பு செய்யலாம்.

இத்தகைய பயிர் வகைகளை பயிரிட்டால் நான்கைந்து மாதங்களில் எக்டர் ஒன்றுக்கு 500 கி.கி. மீன்கள் கிடைக்கிறது. இம்முறையில் நெற்பயிர்களுடன் சாதாக் கெண்டை, திலேப்பியா, விரால் போன்ற மீன் இனங்களையும் நன்னீர் இறால்களையும் வளர்த்தெடுக்கலாம். (தகவல்: - பா.கணேசன், உதவி பேராசிரியர், வெ.பழனிச்சாமி, திட்ட ஒருங்கிணைப்பாளர், வேளாண் அறிவியல் நிலையம், குன்றக்குடி-630 206. 04577-264 288.)**-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

**பால்மாடு வாங்குகிறீரா... இதோ சில குறிப்புகள்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 24,2011,00:00 IST



எந்த ஒரு கால்நடைப் பண்ணைத் தொழிலையும் ஆரம்பிக்கும் முன் முதலில் பண்ணை தொடங்கும் இடத்தினை நன்றாக ஆராய வேண்டும். பின்னர் இடத்திற்கு ஏற்ற இனத்தைத் தேர்வு செய்ய வேண்டும். அதுபோலவே பால் மாடு வாங்குவதற்கு முன் நம்முடைய மாவட்டம், தண்ணீர் பயன்பாடு, தீவனம் உற்பத்தி செய்யும் அளவு, பயிரிடல் போன்ற அனைத்து முக்கியமான குறிப்புகளையும் நன்றாக அலசி ஆராய்ந்து அதன் பின்னர் நம்முடைய பண்ணைக்கு ஏற்ற பசுமாட்டினை தேர்வுசெய்து வாங்க வேண்டும். பால் பண்ணை தொழிலுக்காக மாடு வாங்கும்போது வயதினை முக்கிய காரணியாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

இளவயதுடைய கன்றுகளை முடிந்தவரையில் தவிர்க்க வேண்டும். ஏனென்றால் பிற்காலத்தில் அவை வளர்ந்து முறையாக சினை பிடிக்குமா என்பது கேள்விக்குறி. அப்படியே சினைபிடித்தாலும் முறையாக கன்று ஈனுமா அல்லது ஈன்றபின் நாம் நினைத்த அளவிற்கு பால் கறக்குமா என்பதெல்லாம் நம்முடைய கையில் இல்லை. வயது முதிர்ந்த மாடுகளை வாங்கினால் பால்பண்ணைத் தொழிலுக்கு எந்தவகையிலும் பயன்படாது. இதுபோன்ற அனைத்து பிரச்னைகளும் வேண்டாம் எனில் ஒன்று அல்லது இரண்டு பெட்டை (கிடேரி) கன்றுகளை ஈன்ற, உடல் வளர்ச்சியில் தேர்ந்த மாட்டினை வாங்கினால் நிச்சயம் நம்முடைய பண்ணையில் பால் பொங்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

அதுபோல் பால்மாட்டினை வாங்கும்பொழுது அதன் முழு உடல் அமைப்பையும் முக்கியமாக முகம், மார்பு, பின்புறத்தொடை, கால்கள், மடி மற்றும் காம்புகள் போன்றவற்றை நன்றாக ஆராய

வேண்டும். முடிகள் பள பளப்பாகவும், வழுவழுப்பாகவும் எந்த ஒரு உண்ணிகளோ, பேன்களோ இல்லாதவாறு பார்த்து வாங்க வேண்டும். ஏனென்றால் நோய் பாதித்த பால் மாடுகளில் இதுபோன்ற பண்புகளை நாம் பார்க்க முடியாது. உதாரணத்திற்கு, கோமாரி நோயால் பாதிக்கப்பட்ட கறவை மாடுகளின் மேல்தோல் பளபளப்பு இழந்தும், முடிகள் சுருண்டும் அசிங்கமான தோற்றத்தை காண்பிக்கும்.

கண்களைப் பொறுத்தவரை அவை நல்ல பொலிவுடனும், மூக்கு அகன்று ஈரத்தன்மையுடனும் இருந்தால் அந்த மாட்டிற்கு பிரச்னை எதுவும் இல்லை என்பதை ஓரளவு தீர்மானித்துவிடலாம். நோய், காய்ச்சல் கண்ட மாட்டில் மூக்கிலிருந்து சளி ஒழுகும். மூக்கு காய்ந்த நிலையில் காணப்படும்.

முதுகுப்பகுதியானது நேராக ஒரே நேர்க்கோட்டில் இருப்பதுபோன்று காணப்பட வேண்டும். அவ்வாறு இல்லாமல் மேல்நோக்கி குவிந்தோ (திட்டு போன்று), கீழ்நோக்கி பள்ளம் விழுந்ததுபோன்றோ (கூன் விழல்) காணப்பட்டால் அந்த மாட்டினை வாங்காமல் தவிர்க்க வேண்டும். மாடுகளின் பின்னங்கால் நன்றாக அகன்று பால்மடி பின்னால் இருந்து பார்க்கும் பொழுது தெளிவாக தெரியுமாறு அமைய வேண்டும். மடியானது நன்றாக பெருத்து நான்கு மடிக்காம்புகளும் மென்மையாகவும், மிருதுவாகவும், ஒரே அளவு உடையதாகவும், சீரான இடைவெளியில் அமைந்திருக்க வேண்டும்.

காம்புகள் எண்ணிக்கையில் குறைந்தோ, அதிகமான அளவில் காணப்பட்டாலோ அல்லது காம்புகளில் அடைப்புகள் காணப்பட்டாலோ அந்த மாட்டினை தவிர்க்க வேண்டும். மடிகளில் எந்த வகையான காயங்களோ, புண்களோ இருக்கக்கூடாது. மடியைத் தொட்டுப்பார்த்தால் மிருதுவாகவும், வழவழப்பாகவும் இருத்தல் நன்று. நோய் தாக்கம் கண்ட மாடுகளில் மடி வீங்கி, கல் போன்றும் வெதுவெதுப்பாகவும் காணப்படும்.
எனவே, மேற்சொன்ன அறிகுறியுடைய, மாட்டினங்களை கறவை மாட்டு பண்ணைக்கு வாங்குதல் கூடாது. மாறாக நன்றாக பெருத்த பால் நரம்புடைய மாடுகள் வாங்குதல் வேண்டும். முடிந்தால் முந்தைய கறந்த பாலின் அளவு, குட்டி ஈன்ற வரலாறு, நோய்கள் ஆகியன பற்றி நன்றாக விசாரித்தபின் மாடுகளை தேர்வு செய்யலாம். நமக்கு சந்தேகம் வருமாயின், மாட்டின் பாலை கறந்து பார்த்தபின்னர் பசு மாட்டினை வாங்க வேண்டும். மேற்கூறிய ஒவ்வொன்றையும் முறையாக பின்பற்றுவோமானால் "பால் பண்ணைக்கு நான்தான் ராஜா' என்ற வீரநடையோடு ஒவ்வொரு பால் பண்ணையாளரும் வாழலாம்.
ரா.தங்கத்துரை,வெ.பழனிச்சாமி மற்றும்,வீ.தவசியப்பன்,வேளாண் அறிவியல் நிலையம்,குன்றக்குடி-630 206.

**"பொன்னீம்' - இயற்கை பூச்சிக்கொல்லி மருந்து**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 24,2011,00:00 IST

விவசாயிகளுக்காக குறைந்த செலவில் சென்னை லயோலா கல்லூரி ஆய்வு மாணவர்கள் உருவாக்கியுள்ள பொன்னீம் என்ற இயற்கை பூச்சிக்கொல்லி மருந்து அறிமுகப்படுத்தப்பட்டது. சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள லயோலா கல்லூரியில் பூச்சியியல் ஆராய்ச்சி நிறுவனம் (என்டோமாலஜி ரிசர்ச் சென்டர்) இயங்கி வருகிறது. சுற்றுச் சூழல் களுக்கு பாதிப்பு ஏற்படுத்தாமல் குறைந்த விலையிலும் இயற்கை பூச்சிக்கொல்லி மருந்தை உருவாக்க இந்த நிறுவனத்தைச் சேர்ந்த ஆராய்ச்சி மாணவர்கள் தீவிர ஆய்வில் இறங்கினர்.
இந்த ஆய்வு மாணவர்கள் புங்கை எண்ணெய், வேப்பெண்ணெய் மற்றும் தாவரங்களிலிருந்து பெறப்பட்ட சில பொருட்களைக் கொண்டு இயற்கை பூச்சிக்கொல்லி மருந்து உருவாக்கினார்கள். இதற்கு "பொன்னீம்' என்று பெயரிடப் பட்டுள்ளது.
**பொன்னீம் தயாரிப்பது எப்படி**: 45% வேப்ப எண்ணெய், 45% புங்க எண்ணெய் இரண்டையும் 10% சோப்புடன் கலக்கவும். ஒரு லிட்டர் தண்ணீருக்கு 30 மில்லி பொன்னீம் என்ற விகிதத்தில் கலந்து தெளிக்க வேண்டும். 10 லிட்டர் கொள்ளளவுள்ள தெளிப்பானில் முதலில் 300 மில்லி பொன்னீமை ஊற்றிவிட்டு பிறகு 10 லிட்டர் தண்ணீரை ஊற்ற வேண்டும். இப்படி செய்தால் பொன்னீம் மருந்து தண்ணீரில் நன்றாக கலந்துவிடும். மீண்டும் ஒரு குச்சியைக் கொண்டு நன்கு கலக்கிக்கொள்ள வேண்டும். ஒரு பாத்திரத்தில் வைத்து கலக்கி, அதன் பிறகு கூட தெளிப்பானில் ஊற்றிக் கொள்ளலாம். ஒரு ஏக்கருக்கு ஒன்றரை லிட்டர் வரை தேவைப்படும்.

**பொன்னீம் கட்டுப்படுத்தும் பூச்சிகள்:**
**அசுவினி**: இளம் இலைகளின் அடிப்பகுதியில் மற்றும் குருத்துக்களின் நுனிப்பகுதியில் காணப்படும்.
**காய்த்துளைப்பான்**: தக்காளி, கத்தரி, வெண்டை மற்றும் மிளகாய் செடிகளைத் தாக்கும் தன்மை உடையது. இதன் பாதிப்பால் விளைச்சல் குறையும்.
**படைப்புழு**: இவை பயிரின் இலைகளை உண்ணும். இந்தப்புழு தாக்கிய இடத்தைப் பார்த்தால் மாடுகள் மேய்ந்ததுபோல இருக்கும். பொன்னீமைக் கண்டதுமே படைப்புழு நடுங்கிவிடும். நெல் தத்துப்பூச்சி, நெல் தண்டு துளைப்பான் ஆகியவற்றையும் பொன்னீம் கட்டுப்படுத்துகிறது.
முற்றிலும் இயற்கையாக தயாரிக்கப்பட்டுள்ள இந்த பூச்சிக்கொல்லியைக் கொண்டு நெல், பருத்தி, நிலக்கடலை, சோளம் உள்ளிட்ட தானியங்கள், காய்கறிகள், காபி, தேயிலை போன்ற மலைப்பயிர்கள், ரோஜா, மல்லிகை முதலான மலர்கள் ஆகியவற்றைத் தாக்கும் அனைத்து வகையான பூச்சிகளையும் புழுக்களையும் அழிக்கலாம். இதை பயன்படுத்துவதால் சுற்றுச்சூழலுக்கு எந்த வகையிலும் பாதிப்பு ஏற்படாது. உற்பத்தி அதிகரிப்பதுடன் தானியங்கள்

மற்றும் பழங்களின் சுவையும் அதிகரிக்கும். தொடர்புக்கு: எம்.அகமது கபீர், வேளாண்மை ஆலோசகர், 268/77, பழைய ஹவுசிங் யூனிட், எல்லீஸ் நகர், தாராபும்-638 653.எம்.அகமது கபீர், 93657 48542.

**ஆவினுக்கு பால் வரத்து அதிகரிப்பு**

ஆகஸ்ட் 24,2011,09:13

---

சென்னை : 'விவசாயிகளிடம் பால் கொள்முதல் செய்வதில், அரசு பால் உற்பத்தி கூட்டுறவு சங்க அலுவலர்கள் மெத்தனப் போக்காக நடந்து கொண்டால், நிர்வாக ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும்' என, உயர் அதிகாரிகள் எச்சரித்துள்ளனர். ஆவினுக்கு, கடந்த இரண்டு மாதத்திற்கு முன், 20 லட்சம் லிட்டராக இருந்த பால் வரத்து, தற்போது, 24 லட்சத்து, 40 ஆயிரம் லிட்டராக உயர்ந்துள்ளது. தமிழகத்தில், ஒரு நாளில் உற்பத்தியாகும், 158 லட்சம் லிட்டர் பாலில், ஆவின் நிறுவனம், 20 லட்சம் லிட்டர் பாலை கொள்முதல் செய்கிறது. பால் கொள்முதலை அதிகரிக்க, ஆவின் திட்டமிட்டுள்ளது.ஆனால், தற்போது, பால் உற்பத்தி கூட்டுறவு சங்கங்களில் உள்ள அலுவலர்கள், விவசாயிகளிடம் பால் கொள்முதல் செய்வதில் போதிய அக்கறை காட்டாமல் உள்ளனர்.

அரசு பால் உற்பத்தி சங்க அலுவலர்களுக்கு, அரசு அதிகாரிகள் பிறப்பித்துள்ள உத்தரவு: கிராமங்களில் தோட்டம் தோட்டமாக சென்று, விவசாயிகளை நேரில் சந்தித்து, அரசு பால் கூட்டுறவு சங்கத்தில் பாலை ஊற்ற, 'கேன்வாஸ்' செய்ய வேண்டும். அரசு கூட்டுறவு பால் சங்கத்தில் பால் ஊற்றும் விவசாயிகளுக்கு, முறையாக பணப் பட்டுவாடா செய்ய வேண்டும். இந்த விஷயத்தில் தவறு செய்யும் அலுவலர்கள் மீது நிர்வாக ரீதியாகவும், காவல் துறை ரீதியாகவும் நடவடிக்கை எடுக்கப்படும்.இவ்வாறு, அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த உத்தரவால், கடந்த இரண்டு மாதத்திற்கு முன், ஆவினுக்கு கிடைத்து வந்த, 20 லட்சம் லிட்டர் பால் வரத்து, 24 லட்சத்து, 40 ஆயிரம் லிட்டராக உயர்ந்துள்ளது.

இது குறித்து கால்நடைத்துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது: தமிழகத்தில், அரசு பால் உற்பத்தி கூட்டுறவு சங்கங்கள், சென்னையில் இருந்து தினமும் கண்காணிக்கப்படுகின்றன. ஆவினுக்கு பால் உற்பத்தி குறைந்தால், அன்றைய தினமே மாவட்ட கலெக்டரிடம் விளக்கம் கேட்கப்படுகிறது.

இந்த நெருக்கடியால், ஆவினுக்கு பால் வரத்து அதிகரிக்க துவங்கியுள்ளது. அரசு கூட்டுறவு பால் சங்கத்தில் பால் ஊற்றும் விவசாயிகளின் கால்நடைகளுக்கு இலவச மருத்துவ வசதி, மானிய விலையில் மாட்டுத் தீவனம், பசும் புல் பயிரிட மானியம் ஆகிய சலுகைகள் வழங்கப்பட உள்ளன. இவ்வாறு அவர் கூறினார்.

**மிளகு சாகுபடியில் வாடல் நோய் அதிகரிப்பு பாதுகாப்பு நடவடிக்கைக்கு ஆலோசனை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 24,2011,01:57 IST

ராசிபுரம்: "மிளகு சாகுபடியில், வாடல் நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளதால், ஒருங்கிணைந்த பாதுகாப்பு நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்' என, கொல்லிமலை தோட்டக்கலை உதவி இயக்குனர் (பொறுப்பு) அசோகன் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: நாமக்கல் மாவட்டம், கொல்லிமலை வட்டராத்தில், 600 ஹெக்டேர் பரப்பில் மிளகு சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது பூ மற்றும் பிஞ்சு பருவத்தில் உள்ள மிளகு பயிரில் வாடல் நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்தால், மிளகு சாகுபடி செய்துள்ள கொல்லிமலை வட்டார விவசாயிகள் நோயை கண்காணிப்பதுடன், ஒருங்கிணைந்த பாதுகாப்பு நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

வாடல் நோய், நாற்றங்கால், இளம் செடிகள் மற்றும் மகசூல் தரும் கொடிகளைத் தாக்குகிறது. அடித்தண்டழுகல் என்று அழைக்கப்படும் இந்நோய், பருவமழை காலங்களில் அதிகமாக காணப்படுகிறது. இந்நோய் தாக்கப்பட்ட கொடியின் தண்டுபாகத்தில் பூமியில் இருந்து ஒரு அடி உயரத்தில் நீர் கசித்த புள்ளிகள் தோன்றும். இலைகள் மஞ்சள் நிறமாக மாறும். வேர்கள் அழுகும். பின், கொடி வாட ஆரம்பித்து இலைகளும் சரங்களும் கொட்டிவிடும். தாக்கப்பட்ட கொடி, பத்து முதல் 20 நாட்களில் காய்ந்துவிடும். இந்நோயை ஒருங்கிணைந்த முறையில் கட்டுப்படுத்த, மிளகு கொடியில் கீழே படரும் கொடிகளை அவ்வப்போது நீக்கிவிட வேண்டும். தரையில் இருந்து ஒரு மீட்டர் உயரம் வரை பக்கக் கிளைகளை நீக்கிவிட வேண்டும்.மழை காலங்களில், கொடியின் தூரில் தண்ணீர் தேங்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். நோயினால் பாதிக்கப்பட்ட கொடிகளை தூருடன் அகற்றி எரித்துவிட வேண்டும். அந்த இடத்தில், 0.25 சதவீதம் காப்பர் ஆக்ஸி குளோரைடு கலவையை மண் நன்கு நனையும்படி ஊற்ற வேண்டும். தரையில் படரும் கொடிகள், தொங்கும் கிளைகாள் மற்றும் தூரில் வளரும் பக்கக்கிளைகளை கவாத்து செய்யும் போது, ஏற்படும் காயங்களை போர்டோ பசையினால் உடனே பூசிவிட வேண்டும். மேலும், 0.25 சதவீதம் காப்பர் ஆக்ஸி குளோரைடை மிளகு கொடிகளின் இலைகள் நன்கு நனையும்படி தெளிக்க வேண்டும். வாடல்நோயை இயற்கையான முறையில் கட்டுப்படுத்த, சூடோமோனாஸ் புளோரசன்ஸ் மற்றும் டிரைக்கோடர்மா விரிடி ஆகியவற்றை தலா ஒரு லிட்டர் நீருடன் ஐந்து

கிராம் என்ற வீதத்தில் நன்கு கலந்து கொடி ஒன்றுக்கு ஐந்து லிட்டர் ஊற்ற வேண்டும். தரைப்பகுதியின் பக்கமுள்ள தண்டும் வேர்ப்பகுதியும் நன்கு நனையும்படி ஊற்ற வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**மானாவாரி பயிர்களுகான தொழில் நுட்பங்கள்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 24,2011,00:58 IST

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் சமீபத்தில் பெய்த மழையை தொடர்ந்து மானாவாரி நிலங்களில் உயர் தொழில் நுடப்பங்களை கடைப்பிடித்து விளைச்சலை பெருக்க வேளாண் துறை அறிவுரை வழங்கியுள்ளது. வேளாண் இணை இயக்குனர் ராஜன் வெளியிட்ட அறிக்கை: தர்மபுரி மாவட்டத்தில் மானாவாரி பயிராக நிலக்கடலை 15,000 ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கடந்த ஒரு மாதமாக மழையின்மை காரணமாக வாடி வதங்கிய நிலையில் இருந்த இப்பயிர் தற்சமயம் பெய்த மழை இச்சாகுபடிக்கு பயன் உள்ளதாக உள்ளது. தற்போது, பூக்கும் நிலையில் உள்ள இப்பயிருக்கு ஏக்கருக்கு 80 கிலோ ஜிப்சம் இட்டு கொத்தி களையெடுத்து மண் அணைக்க வேண்டும். இது பொக்கற்ற, திரட்சியான காய்களை பெற உதவும், எடை கூடும், எண்ணெய் சத்து அதிகரிக்கும், கூடுதல் விலை கிடைக்கும்.

* மரவள்ளியில் ஊடுபயிர்: கார்த்திகை, மார்கழி, தை மாங்களில் மானாவாரியில் சாகுபடி செய்யப்பட்டுள்ள மரவள்ளி பயிரில் தொடர்ந்து நிலவிய கடும் வறட்சியின் காரணமாக போக்கிடங்கள் அதிகம் ஏற்பட்டுள்ளது.

தற்போது, மீண்டும் மரவள்ளி கரணைகள் நடவு செய்ய வாய்ப்பு இல்லை. தற்போது பெய்த மழையை பயன்படுத்தி நன்கு கொத்தி களை எடுத்து பயிருக்கு உரமிடலாம். அதே சமயம் போக்கிடங்களில் பயறு வகை பயறுகளான பாசிப்பயறு, உளுந்து மற்றும் காராமணி பயிர்களை விதைப்பு செய்து வருவாய் இழப்பை தவிர்க்கலாம்.

* சிறுதானியங்கள்: சோளம், ராகி, சாமை ஆகிய பயிர்கள் விதைப்புக்கு ஏற்ற தருணம். சோளம் விதைப்பிற்கு முன் பட்டத்தில் மழையில்லாமையால் விதைப்பு மேற்கொள்ளப்படவில்லை. தற்போது, சோளம் விதைப்பு செய்யும் விவசயிகள் விதை மூலம் பரவும் சோளம் கரிப்பூட்டை நோயை கட்டுப்பத்த விதைக்கும் முன் ஒரு கிலோ விதைக்கு நான்கு கிராமம் கந்தகம் என்ற அளவில் விதையுடன் கலந்து விதை நேர்த்தி செய்து விதைக்க வேண்டும்.

ராகி பயிரை பொறுத்த வரையில் வறட்சியை தாங்கி அதிக விளைச்சல் தரவல்ல மானாவாரிக்கு ஏற்ற ரகங்கள் ஜி.பி.யு., 28, பையூர் 1, கோ 13 மற்றும் கோ (ஆர்) 14 ஆகிய ரகங்கள் தேர்வு செய்ய வேண்டும். விதை மூலம் பரவும் நோய்களை கட்டுப்படுத்த பூஞ்சாள மருந்தை விதை நேர்த்தி செய்து விதைக்க வேண்டும். சாமையில் உயர் விளைச்சல் தரவல்ல குறைந்த வயதுடைய கோ 3

ரகங்கள் மிகவும் ஏற்றதாகம். விதைப்புக்கு முன் 10 சதவீதம் இளநீர் கரைசலில் விதைகள் ஆறு மணி நேரம் ஊற வைத்து விதைப்பதன் மூலம் அதிக விளைச்சல் பெற முடியும்.
அனைத்து சிறு தானிய பயிர்களையும் பூஞ்சாள விதை நேர்த்தி செய்த 24 மணறி நேரத்துக்கு பின் ஒரு ஏக்கருக்கு தேவையான விதையை ஒரு பொட்டலம் அசோஸ்பைரில்லம் மற்றும் ஒரு பொட்டலம் பாஸ்போபேக்டீரியா தேவையான ஆறின அரிசி கஞ்சியுடன் கலந்து விதை நேர்த்தி செய்து நிழலில் உலர்த்தி பின் விதைப்பு செய்ய வேண்டும்.

அடியுரமாக 16 கிலோ தழைச்சத்து தரவல்ல 35 கிலோ யூரியா மற்றும் 8 கிலோ மணிசத்து தரவல்ல 50 கிலோ சூப்படர் பாஸ்பேட் உரத்தை அடியுரமாக இட்டு விதைப்பு செய்திட வண்டும். ஏற்கனவே விதைப்பு செய்யப்பட்ட பயிர்களுக்கு அடியுரம் இடாமல் விதைப்பு செய்திருந்தால் 16 கிலோ தழைசத்து தரவல்ல 35 கிலோ யூரியாவை இட்டு இடையுழவு செய் வேண்டும். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**விவசாயிகளுக்கு விதை கிராம திட்டத்தில் விழிப்புணர்வு முகாம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 24,2011,01:11 IST

கும்பகோணம்: மணஞ்சேரி கிராமத்தில் விதை கிராமத்திட்டத்தில் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு முகாம் நடந்தது. தஞ்சாவூர் மாவட்டம் ஆடுதுறை தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம், தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி உதவியுடன் நடைபெறும் விதைகிராமத்திட்டத்தின் கீழ் பாபநாசம் அருகே மணஞ்சேரி கிராமத்தில் விவசாயிகளுக்கு தரமான நெல் விதை உற்பத்தி முறைகள் தொடர்பான ஒருநாள் விழிப்புணர்வு முகாம் நடந்தது. தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலைய இயக்குனர் ஜெயராஜ் முகாமிற்கு தலைமை வகித்து விதை கிராமத்திட்ட செயல்பாடு மற்றும் எதிர்கால திட்டம் குறித்து விளக்கமளித்தார்.

உழவியல் துறை பேராசிரியர் பன்னீர்செல்வம் நெல் விதை உற்பத்திக்கு நாற்றங்கால் தேர்வு மற்றும் பராமரிப்பு பற்றி விளக்கினார். பூச்சியியல் துறை பேராசிரியர் சோழன், நன்கு வாளிப்பான நாற்றுகளை பெறுவதற்கான சூடோமோனஸ் விதை நேர்த்தி மற்றும் நாற்றங்காலில் பூச்சி கட்டுபாட்டு வழிமுறைகள் பற்றி விளக்கினார். பாபநாசம் வேளாண் உதவி இயக்குனர் நெடுஞ்செழியன் பேசினார். முகாமில் 30 முன்னோடி விவசாயிகள் மற்றும் வேளாண் உதவி அலுவலர் சேதுராமன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். இத்திட்டத்தில் பங்குபெறும் 30 விவசாயிகளுக்கு 20 கிலோ வீதம் பொன்மணி நெல் ரக சான்று விதை வழங்கப்பட்டது. முன்னதாக விதை அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை பேராசிரியர் ராஜா அனைவரையும் வரவேற்றார். ஏற்பாடுகளை தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையத்தினர் செய்திருந்தனர்.

**விளைச்சல் அமோகம்: விலையோ மலிவுவேதனையில் வெண்டை விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 24,2011,01:21 IST

விளைச்சல் அமோகமாக இருந்தாலும், லாரி ஸ்டிரைக்கினால் மார்க்கெட் கொண்டு செல்ல முடியாமை, அப்படியே கொண்டு சென்றாலும் விலை இன்மையால் மதுரை கருமாத்தூர் பகுதி வெண்டை விவசாயிகள் விரக்தியில் உள்ளனர்.மதுரை செக்கானூரணி பகுதியில் கத்தரிக்காய், கருமாத்தூர் பகுதியில் வெண்டைக்காய் மிக பிரசித்தம். இப்பகுதிகளில் விளையும் காய்கள் சுவையானது என்பதால் மதுரை மாவட்டத்தில் மட்டுமின்றி கேரளாவிற்கு கூட இங்கிருந்து காய்கறிகள் செல்லும். 60 சென்ட் நிலத்தில் வெண்டை பயிரிட்டுள்ள இப்பகுதி விவசாயி ஒருவர் கூறுகையில்:ஒரு நாள் விட்டு ஒரு நாள் 30 சிப்பத்திற்கு ( மூடை) வெண்டைக்காய் விளையும். ஒரு மாதத்திற்கு முன் வரை கிலோ ரூ. 28 க்கு விற்ற வெண்டைக்காய் தற்போது ரூ. 4 க்கு விற்கிறது. பரவை மார்க்கெட்டிற்கு விற்பனைக்காக கொண்டு செல்கிறோம். வேனில் கொண்டு செல்ல, ஏற்றுக்கூலி இறக்குகூலி கூட கிடைக்காது. கேரளாவிற்கு அனுப்பலாம் என்றால் லாரி ஸ்டிரைக். நல்ல காய்களை இங்கு வந்த விலைக்கு விற்று விட்டு ஆடு, மாடுகளுக்கு தீவனமாக போடுகிறோம், என்றார் வேதனையுடன். உழவன் கணக்கு பார்த்தால் உழக்கு கூட மிஞ்சாது என்பது இது தானோ.-நமது சிறப்பு நிருபர்-

**மண்புழு வளர்ப்பு மற்றும் மண்புழு உரம் தயாரிப்புக்கான ஒரு நாள் சிறப்பு பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 24,2011,02:27 IST

ஆழ்வார்குறிச்சி : வளர்ந்து வரும் நாகரிக உலகில் மனிதன் பல்வேறு நோய்களுக்கு உட்படுகிறான். சுற்றுச்சூழல் மாசுபாடு, ஆரோக்கியமற்ற உணவு மற்றும் வாழ்க்கை முறையில் மாற்றம் மேலும் விவசாயத்தில் இரசாயண உரங்கள் மற்றும் நச்சு விளைவிக்க்கூடிய பூச்சிக்கொல்லிகள் அதிகம் பயன்படுத்துதலே காரணம்.

இதற்கு மாற்றாக இயற்கை வேளாண்மைக்கு தேவையான முக்கிய இடுபொருளாக மண்புழு உரம் பயன்படுகிறது. மண்புழு உரம் அதிக அளவில் உற்பத்தி செய்ய விழிப்புணர்வும், பயிற்சிகளும் அவசியமானவை. இதனைக்கருத்தில் கொண்டு ஆழ்வார்குறிச்சி ஸ்ரீ பரமகல்யாணி கல்லூரி, விலங்கியல் துறை மூன்றாம் ஆண்டு மாணவர்களுக்கு பயிற்சி வகுப்பாகவும், தொழில்

முனைவோராக மாறவும் மண்புழு வளர்ப்பு மற்றும் மண்புழு உரம் உற்பத்தி செய்தல் பற்றி ஒரு நாள் சிறப்பு பயிற்சி முகாம் நடத்தப்பட்டது.

இப்பயிற்சியில் செயல்முறை விளக்கமாக புழு வளர்ப்பு, உரம் தயாரிப்பு, மண்புழு ரகங்கள், தேவையான மூலப்பொருட்கள் போன்றவற்றுடன் செய்து காட்டப்பட்டது. குறிப்பாக மண்புழு உரம் தயாரிப்பதற்கு தேவையான புழு வகைகள், யூடிரில்லஸ் எக்ஸ்வேட்டஸ் இவைகள் மண்ணில் மேல் மட்டத்திலும், தொட்டிகளிலும் வளர்ந்து மண்புழு உரம் தயாரிக்கலாம்.

சாதாரணமாக 1 டன் மண்புழு உரம் தயாரிப்பதற்கு தேவையான மூலப்பொருட்கள் 1டிராக்டர் அளவு சாணம் மற்றும் முக்கிய இலை, தழைகள், மரத்தூள் மேலும் மாட்டு கோமியம் இவைகளை பயன்படுத்தி 10நாட்கள் மட்க வைத்து படுக்கை தயார் செய்யவேண்டும். குறைந்த நாட்களில் அதன்பின் 3லிருந்து 5கிலோ வரை வளமான மண்புழு இடவேண்டும். குறைந்த நாட்களில் மண்புழு உரம், மண்புழு மற்றும் மண்புழு திரவம் தயாரிக்கலாம். இதன் மூலம் மாதத்திற்கு 30ஆயிரம் முதல் 50ஆயிரம் வரை வருமானம் ஈட்டலாம்.

இந்த ஒருநாள் பயிற்சி முகாமிற்கு கல்லூரி முதல்வர் டாக்டர்.ரஞ்சித்சிங் தலைமை வகித்து தொடங்கிவைத்தார். கல்பவிருட்ஷக இயக்குநர் செந்தில்குமார் மற்றும் திட்ட அதிகாரி மீனாட்சி சிறப்பான முறையில் மாணவர்களுக்கு பயிற்சியை அளித்தனர். இப்பயிற்சிக்கான ஏற்பாட்டை விலங்கியல் துறை பேராசிரியர்கள் மற்றும் ஆராய்ச்சி மாணவர்கள் ஒழுங்கு செய்தனர்.

மேலும் இப்பயிற்சி பெற கீழ்கண்ட முகவரிக்கு தாரளமாய் தொடர்பு கொள்ளலாம்.செந்தில்குமார், இயக்குனர் கல்பவிருட்ஷம், இயற்கை வேளாண்மை தொழில் நுட்பமையம், தென்காசி. அலைபேசி 94424-90038. ஜே.எஸ்.மைக்கேல், விரிவுரையாளர், விலங்கியல் துறை, ஸ்ரீபரமகல்யாணி கல்லூரி, ஆழ்வார்குறிச்சி, அலைபேசி 9345096842

**நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் இல்லாததால் அவதி**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 23,2011,23:11 IST

பொன்னேரி:அரசு நிர்ணயிக்கும் விலைக்கு, நெல் மூட்டைகள் விற்பனை செய்ய, நேரடி கொள்முதல் நிலையங்கள் இல்லாததால், உரிய விலை கிடைக்காமல், வேதனையில் உள்ள விவசாயிகளுக்கு, இன்றைய விவசாயிகள் குறை தீர்ப்பு கூட்டத்தில் தீர்வு கிடைக்குமா? என, விவசாயிகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.
பொன்னேரி, கும்மிடிப்பூண்டி தாலுகாவிற்கு உட்பட்ட பகுதிகளில், 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட

விவசாயிகள் நெல் சாகுபடியில் ஈடுபட்டு வருகின்றனர். சம்பா, குறுவை என, ஆண்டுக்கு இரண்டு முறை பயிரிடுபவர்களும், மழையை மட்டும் நம்பி, ஆண்டுக்கு ஒரு முறை பயிரிடும் விவசாயிகளும் உள்ளனர்.
பருவம் தவறி வரும் மழை, விதை நெல் தட்டுப்பாடு, மின் தட்டுப்பாடு, உரத் தட்டுப்பாடு, வேலையாட்கள் பற்றாக்குறை என, பல்வேறு இன்னல்களுக்கு இடையே, பெரும் சிரமத்துடன் விவசாயம் பார்த்து வருகின்றனர்.நெல் வியாபாரிகளின் கூட்டணியில் விலை நிர்ணயம் செய்யப்படுவதால், விவசாயத்திற்கு செலவிட்ட தொகையை விட, குறைவான வருவாயே கிடைக்கிறது.உழவுப் பணிகள், நடவுப் பணிகள், அறுவடைப் பணிகள் என, ஏக்கருக்கு 18,000 ரூபாய் வரை செலவு ஏற்படுகிறது.

ஒரு சில நேரங்களில், பருவம் தவறி வரும் மழையால், நெற்பயிர்கள் பாதிக்கப்பட்டு, குறைந்தளவு சாகுபடியே கிடைக்கிறது.நெல் வியாபாரிகள் டி.கே.எம். 9 ரக நெல் மூட்டைக்கு (75 கிலோ), 500 முதல் 550 ரூபாய் வரை விலை நிர்ணயம் செய்கின்றனர். ஏ.டி.டி. 43 ரக நெல் மூட்டைக்கு (75கிலோ) 630 ரூபாய் வரை விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. அப்படியானால், ஏக்கருக்கு 12,000 ரூபாய் முதல் 15,000 ரூபாய் வரை மட்டுமே வருவாய் கிடைக்கிறது.

விவசாய பணிகளுக்கு செலவிட்டதை கணக்கிட்டால் 3,000 முதல் 6,000 ரூபாய் வரை நஷ்டமே ஏற்படுகிறது. நெல்லின் தரத்திற்கேற்ப இந்த விலை மாற்றத்தில், கூடுதலும், குறைவும் உண்டு. இதனால், விவசாயிகள் பெரும் இன்னலுக்கு ஆளாகின்றனர். இது குறித்து, மீஞ்சூர் ஒன்றியம் ஆலாடு விவசாயிகள் சங்கத் தலைவர் பிரகாஷ் கூறியபோது, " மற்ற மாவட்டங்களில், அரசு நிர்ணயிக்கும் நெல் மூட்டைகளை வாங்க நேரடி கொள்முதல் நிலையங்கள் செயல்படுகிறது.

நேரடி கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்யும் விவசாயிகளுக்கு, சன்னரக நெல் மூட்டைக்கு 825 ரூபாயும், குண்டுரக நெல் மூட்டைக்கு 750 ரூபாயும் கிடைக்கிறது. இதனால், விவசாயிகளுக்கு லாபம் கிடைக்கிறது.

மேலும், நெல்லின் தரம் எப்படி இருந்தாலும், நேரடி கொள்முதல் நிலையங்களில், ஒரே விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. ஆனால், பொன்னேரி பகுதியில், நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் இல்லாததால், விவசாயிகள் மிகுந்த வேதனைக்கு ஆளாகிறோம்.விவசாயம் தழைக்கவும், விவசாயிகளின் உழைப்புக்குரிய மரியாதை கிடைக்கவும், அரசு நிர்ணயிக்கும் விலைக்கு நெல் மூட்டைகளை விற்பனை செய்யவும், பொன்னேரி பகுதியில் நேரடி கொள்முதல் நிலையம் அமைக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று கூறினார்.

இது குறித்து, சிவில் சப்ளை அதிகாரி ஒருவர் கூறும் போது, "திருவள்ளூர் மாவட்டத்தில், ஊத்துக்கோட்டை தாலுக்காவில் மட்டும் நேரடி கொள்முதல் நிலையம் செயல்படுகிறது. போதிய இடவசதி இல்லாத காரணத்தால், மற்ற இடங்களில் கொள்முதல் நிலையங்கள் அமைப்பதில் சிரமம் உள்ளது, என்றார்.திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள, விவசாயிகளுக்கான குறை தீர்ப்பு நாள் கூட்டம் இன்று (24ம்தேதி) கலெக்டர் தலைமையில் நடைபெறுகிறது. இன்றைய கூட்டத்திலாவது, இப்பிரச்னைக்கு தீர்வு கிடைக்குமா என, விவசாயிகள் வேதனையுடன் காத்திருக்கின்றனர்.

**பார்த்தீனியம் செடிகளை அழிக்க "மெக்ஸிகன்' வண்டு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 23,2011,22:13 IST

ராமநாதபுரம்:பார்த்தீனியம் செடிகளை அழிக்க "மெக்ஸிகன்' வண்டுகளை, பயன்படுத்த தமிழக அரசு அறிவுறுத்தி உள்ளது. இதையடுத்து நச்சுக்களைகள் ஒழிப்பு இயக்கம் மூலம் விழிப்புணர்வு முகாம் நடத்தப்பட்டு வருகிறது. பார்த்தீனியம் செடியால் ஆஸ்துமா, தொழுநோய், சுவாசம் சம்பந்தமான நோய்கள் ஏற்படும். இந்த செடி ஒரு முறை உற்பத்தியாகி விட்டால், மழை, வறட்சியை தாங்கி வளரும் தன்மை உடையது. இதன் மகரந்த தூள் காற்று மண்டலத்தில் ஆண்டு முழுவதும் காணப்படும்.
இவற்றை ஒழிக்க மழை காலத்தில் உற்பத்தியாகி, பெருகும் மெக்ஸிகன் வண்டுகளை சேகரித்து, பார்த்தீனியம் மிகுந்த பகுதிகளில் பரவ விட்டு இந்த செடிகளை அழிக்கலாம். பார்த்தீனியம் வளரும் இடங்களில், அட்ரஸின், 24 டி, கிளைபோசேட் மற்றும் மெட்ரிபூசன் களைக் கொல்லிகளை பயன்படுத்த வேண்டும் எனவும் மாவட்ட வேளாண் அலுவலர்கள் விவசாயிகளிடம் அறிவுறுத்தி வருகின்றனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

# விளைச்சல் அதிகரிப்பால் முருங்கைக்காய் விலை வீழ்ச்சி



விளைச்சல் அதிகரிப்பால் முருங்கைகாய் வரத்து அதிகரித்து அதன் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. நேற்றைய நிலையில் ஒரு கிலோ முருங்கைகாய் ரூ.8–க்கு விற்பனை யானது. இதன் காரணமாக கோவையில் உள்ள மார்க்கெட்டுகளில் குவித்து வைக்கப் பட்டு உள்ள முருங்கைகாய்களை படத்தில் காணலாம்.

# மார்க்கெட் நிலவரம்

## சென்னை மார்க்கெட்

**சர்க்கரை**

வெளிச்சந்தை சர்க்கரை
ஒரு குவிண்டால் 2,950–3,000

**மணிலா பயறு**

80 கிலோ கொண்ட மூட்டை 4,000–4,030

**கடலை எண்ணெய்**

ஒரு குவிண்டால் (வரி உள்பட) 9,850–00

**கடலை புண்ணாக்கு**

70 கிலோ மூட்டை
(சாக்கு வரி உள்பட) 1,650–00

**தேங்காய் எண்ணெய்**

15 கிலோ கிராம் கொண்ட
டின் (வரி உள்பட) 2,013–00

**நல்லெண்ணெய்**

குமாரகுரு, திருமால், பிள்ளையார், சீனிவாசா, புவனேசுவரி, பெருமாள், பிருந்தாவனம் ஆகிய ரகங்கள்,
1 குவிண்டால் (வரி உள்பட) 10,500–00
டின் (15 கிலோ) 1,750–00

**விளக்கெண்ணெய்**

ஒரு குவிண்டால் (வரி உள்பட) 11,500.00
15 கிலோ டின் (வரி உள்பட) 1,850–00

**சூரியகாந்தி எண்ணெய்**

சுத்திகரிக்கப்பட்டது 15 கிலோ
டின் (வரி உள்பட) 1,215.00

**ரீபைண்டு ஆயில்**

(சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய்)
15 கிலோ டின் (வரி உள்பட) 1,635.00

**வனஸ்பதி**

டின் ஒன்றுக்கு (வரி உள்பட) 1,125.00

**பாமாயில்**

10 கிலோ டின் (வரி தனி) 570–00

## பருப்பு வகைகள் மார்க்கெட்

கோவை, ஆக.23–

கோவை டி.கே.மார்க்கெட் வியாபாரிகள் சங்கத்தில் பருப்பு வகைகள் விலை விவரம் வருமாறு:–

| பருப்புவகைகள் | 100 கிலோ மூட்டை | ஒரு கிலோ |
|---|---|---|
| மஞ்சள் நெ.1 | ரூ. 9,000 | 95.00 |
| மல்லி (40கி) | ரூ. 3,200 | 90.00 |
| புளி (40கி) | ரூ. 3,200 | 85.00 |
| வரமிளகாய் (20கி) | ரூ. 2,060 | 110.00 |
| துபருப்பு | ரூ. 5,200 | 58.00 |
| க.பருப்பு (பாம்பே) | ரூ. 4,100 | 44.00 |
| உளுந்தம் பருப்பு (கருப்பு) | ரூ. 5,800 | 60.00 |
| உ.பருப்பு (வெள்ளை) | ரூ. 6,600 | 68.00 |
| தட்டபயிறு | ரூ. 3,600 | 38.00 |
| மொச்சை பயிறு (அவரை) | ரூ. 3900 | 44.00 |
| கண்டல் கடலை | ரூ. 4000 | 32.00 |
| பொட்டுக்கடலை(54கி) | ரூ. 2,400 | 48.00 |
| நிலக்கடலை(50கி) | ரூ. 5,200 | 70.00 |
| பச்சைபயிறு | ரூ. 5,000 | 54.00 |
| கொள்ளு | ரூ 1,700 | 20.00 |
| க.பருப்பு (டெல்லி) | ரூ. 3,900 | 41.00 |
| சர்க்கரை | ரூ. 3,100 | 32.00 |

## மற்ற மாநில பஞ்சு விலை

கோவை, ஆக.23–

கோவை, உப்பிலிபாளையம், காமராஜர் ரோடு, தென்னிந்திய பருத்தி பஞ்சாலை சங்கத்தின் மற்ற மாநில பஞ்சு விலை

(ஒரு குவிண்டாலுக்கு) விவரம் வருமாறு:–

1. வி.797 22எம்.எம் ரூ. 6,749
2. ஜெயதார் (கர்நாடகா) ரூ. 7,311
3. ஜே 34 எஸ்.ஜி. 24 எம்.எம் (புதியது) ரூ. 9912
4. எம்.இ.சி.எச் (மத்திய பிரதேசம் ரூ. 9,139
5. சங்கர் 6 28 எம்.எம். புதியது ரூ. 10,348
6. எம்.சி.யு. 5 32 எம்.எம். ரூ. 10,545
7. டி.சி.எச். 32 34 எம்.எம். (கர்நாடகா) புதுசு ரூ. 15,747

## கோவை உழவர் சந்தை

கோவை, ஆக.23–

கோவை ஆர்.எஸ்.புரம் கவுலி பிரவுன் ரோட்டில் உள்ள கோவை உழவர் சந்தையில் விற்பனை செய்யப்படும் காய்கறிகளின் விலை விவரம் வருமாறு:–

**காய்கறிகள் (கிலோவுக்கு)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எலுமிச்சம்பழம் | ரூ. | 35–40 | காலிப்பிளவர் | ரூ. | 18–20 |
| கத்தரிக்காய் | ரூ. | 12–18 | பொறியல் தட்டை | ரூ. | 14–18 |
| வெண்டைக்காய் | ரூ. | 8–10 | தேங்காய் | ரூ. | 6–14 |
| நாட்டுத்தக்காளி | ரூ. | 4–5.50 | பட்டாணி | ரூ. | 100–110 |
| ஆப்பிள் தக்காளி | ரூ. | 6–7 | கறிவேப்பிலை | ரூ. | 12–14 |
| புடலை | ரூ. | 14–20 | அகத்தி | ரூ. | 16–00 |
| பீர்க்கான்காய் | ரூ. | 12–18 | வாழைக்காய் | ரூ. | 20–00 |
| சுரைக்காய் | ரூ. | 12–15 | குடைமிளகாய் | ரூ. | 30–34 |
| பாகற்காய் | ரூ. | 12–14 | சாதா பீன்ஸ் | ரூ. | 17–20 |
| கொத்தவரை | ரூ. | 14–10 | டபுள்பீன்ஸ் | ரூ. | 50–00 |
| பூசணிக்காய் | ரூ. | 8–10 | கறிபீன்ஸ் | ரூ. | 17–20 |
| அரசாணிக்காய் | ரூ. | 7–8 | புஸ்பீன்ஸ் | ரூ. | 20–25 |
| மேராக்காய் | ரூ. | 12–16 | காளான் | ரூ. | 80–140 |
| பச்சை மிளகாய் | ரூ. | 26–00 | இளநீர் (ஒன்று) | ரூ. | 11–14 |
| குண்டு மிளகாய் | ரூ. | 26–00 | மாங்காய் | ரூ. | 14–20 |
| சின்னவெங்காயம் | ரூ. | 16–20 | திராட்சை | ரூ. | 50–00 |
| பெரியவெங்காயம் | ரூ. | 20–00 | சப்போட்டா 1கிலோ | ரூ. | 18–00 |
| இஞ்சி | ரூ. | 36–00 | கொய்யா1கிலோ | ரூ. | 20–00 |
| முருங்கைக்காய் | ரூ. | 14–12 | மாதுளை1கிலோ | ரூ. | 90–00 |
| உருளைக்கிழங்கு | ரூ. | 18–20 | பப்பாளி 1 கிலோ | ரூ. | 17–00 |
| சேனைகிழங்கு | ரூ. | 25–00 | வரமிளகாய் | ரூ. | 90–00 |
| கருணைகிழங்கு | ரூ. | 40–00 | மாம்பழம் | ரூ. | 20–40 |
| சேப்பங்கிழங்கு | ரூ. | 22–00 | ஆப்பிள் | ரூ. | 115–00 |
| மரவள்ளிகிழங்கு | ரூ. | 15–00 | சாத்துக்குடி | ரூ. | 36–00 |
| சக்கரவள்ளிகிழங்கு | ரூ. | 15–00 | நெல்லிக்காய் | ரூ. | 32–00 |
| சிறுகிழங்கு | ரூ. | 18–22 | ஆரஞ்சு | ரூ. | 75–00 |
| முள்ளங்கி | ரூ. | 12–15 | வெள்ளரி | ரூ. | 12–28 |
| கேரட் (ஊட்டி) | ரூ. | 26–00 | புளி 1 கிலோ | ரூ. | 75–80 |
| பீட்ரூட் (ஊட்டி) | ரூ. | 16–18 | பஜ்ஜிமிளகாய் | ரூ. | 30–34 |
| நூல்கோல் | ரூ. | 18–20 | அவரை | ரூ. | 18–00 |
| கொத்துமல்லி | ரூ. | 20–24 | நிலக்கடலை | ரூ. | 26–32 |
| டர்னிப்ஸ் | ரூ. | 22–00 | மக்காச்சோளம் | ரூ. | 18–24 |
| முட்டைகோஸ் | ரூ. | 8–10 | | | |
| கலர்கோஸ் | ரூ. | 14–00 | | | |
| புதினா | ரூ. | 16–00 | | | |

## வயநாடு மார்க்கெட்

வயநாடு மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி (குவிண்டாலுக்கு) விலை விவரம் வருமாறு:–

| | |
|---|---|
| மிளகு (நாடன்) | ரூ. 27750 |
| மிளகு (சேட்டன்) | ரூ. 28,200 |
| மிளகு (வயநாடன்) | ரூ. 29,200 |
| கொட்டைபாக்கு (புதியது) | ரூ. 13,000 |
| கொட்டைபாக்கு (பழையது) | ரூ. 12,000 |
| சுக்கு (புதியது) | ரூ. 12000 |
| சுக்கு(பழையது) | ரூ. 10,100 |
| ஏலக்காய் (வெள்ளை) | ரூ. 1000 |
| ஏலக்காய் (பச்சை) | ரூ. 1200 |
| தேங்காய் எண்ணை(100 லிட்டர்) | ரூ. 9250 |
| கொப்பரை நாடன் | ரூ. 6125 |
| கொப்பரை ராசு | ரூ. 6025 |
| கொப்பரை தில்பசன் | ரூ. 6275 |
| கொப்பரை ராஜிப்பூ | ரூ. 6100 |
| உருண்டை கொப்பரை | ரூ. 7400 |
| ரப்பர் ஆர்.எஸ்.5 | ரூ. 18700 |
| ரப்பர் ஆர்.எஸ்.4 | ரூ. 19200 |
| ரப்பர் பால் | ரூ. 14400 |
| காப்பி | ரூ. 10700 |
| உருண்டைகாப்பி (52 கிலோ) | ரூ. 3200 |
| நேந்திரகாய் | ரூ. 2500 |
| இஞ்சி | ரூ. 1400 |

## எண்ணை மார்க்கெட்

கோவை, ஆக.23–

கோவை சமையல் எண்ணை வியாபாரிகள் சங்கத்தில் நேற்றைய எண்ணை விலை விவரம் வருமாறு:–

| எண்ணை வகை | (15 கிலோ) | (1 லிட்டர்) சில்லறை விலை |
|---|---|---|
| ரீபைண்ட் ஆயில் | | |
| கணபதி பிராண்ட் | ரூ.1,680 | 108.00 |
| கோல்டன் சன் பிராண்ட் | ரூ.1190 | 76.00 |
| சன் பிளவர் ஆயில் | | |
| கோல்டு வின்னர் பிராண்ட் | ரூ.1260 | 80.00 |
| பருத்தி விதை எண்ணை | | |
| ஜி.ஆர்.பிராண்ட் | ரூ.1100 | —— |
| அரிசி தவிடு எண்ணை | | |
| பூர்ணாபிராண்டு | ரூ.1220 | 77.00 |
| நல்லெண்ணை | | |
| காந்திமதி பிராண்ட் | ரூ. 1,400 | 100.00 |
| தேங்காய்எண்ணை | ரூ. 1600 | 110.00 |
| என்.கே.எஸ்பிராண்ட் | ரூ. 1,850 | 120.00 |
| பாம் ஆயில் | | |
| ருசிபிராண்டு | ரூ. 1,080 | 60.00 |
| கடலைஎண்ணைவள்ளல்பிராண்டு | ரூ. 1,570 | 102.00 |
| வனஸ்பதி | | |
| லில்லி பப்ஸ் பிராண்ட் | ரூ. 1,260 | – |
| கிரேட் செப் பிராண்ட் | ரூ. 1010 | – |
| அபிராமிபிராண்டு | ரூ. 1,050 | – |
| சாரதா பிராண்ட் | ரூ. 1,050 | – |

### பட்டுக்கூடு

| மஞ்சள் கலப்பினம் | | வெள்ளை கலப்பினம் | |
|---|---|---|---|
| அதிகபட்சவிலை | ரூ.225.00 | அதிகபட்சவிலை | ரூ.318.00 |
| சராசரி விலை | ரூ.166.75 | சராசரி விலை | ரூ.268.00 |
| குறைந்தபட்சவிலை | ரூ.140.00 | குறைந்தபட்சவிலை | ரூ.234.00 |

**பட்டு நூல் ரூ.1,630**

## தங்கம் மார்க்கெட் நிலவரம்

| தங்கம் | சென்னை | கோவை | திருப்பூர் |
|---|---|---|---|
| 22 காரட்(1 பவுன்) | 21,040.00 | 21,040.00 | 21,400.00 |
| ஒரு கிராம் | 2,630.00 | 2,630.00 | 2,675.00 |
| வெள்ளி | | | |
| 1 கிலோ | 65,965.00 | 70,600.00 | 72,000.00 |
| ஒரு கிராம் | 70.60 | 70.60 | 72.00 |

தினகரன்

**தொடர்மழையால் தேங்காய் உற்பத்தி பாதிப்பு**

பதிவு செய்த நாள் : 8/24/2011 2:21:54



தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் தொடர் மழை மற்றும் குளுமையான சீதோஷ்ண நிலையால் கொப்பரை தேங்காய் உற்பத்தி பாதிக்கப்பட்டு உள்ளது. இதனால் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படும் அபாயம் உள்ளது. தர்மபுரி மாவட்டத்தில் காரிமங்கலம், கம்பைநல்லூர், இருமத்தூர், பாலக்கோடு, மாரண்டஹள்ளி, பாப்பிரெட்டிபட்டி, உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 19 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் தென்னை சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

எனவே, காவேரிப்பட்டணத்தில் கொப்பரை கொள்முதல் மையம் தொடங்கப்பட்டது. ஆடி மாதம் தொடங்கியதில் இருந்தே மாவட்டம் முழுவதும் குளுமையான சீதோஷ்ண நிலையுடன் மழையும் தொடர்கிறது. இதனால், கொப்பரை தேங்காயை காய வைக்க முடியாமல் அழுகும் நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் சோகத்துடன் கூறினர். நஷ்டத்தை தவிர்க்க பலர் சந்தைகளுக்கு அதிகளவில் கொண்டு செல்கின்றனர். இதனால், கடந்த வாரத்தில் சந்தைகளில் ஸி10க்கு விற்ற பெரிய அளவிலான தேங்காய் நேற்று ஸி5க்கும், ஸி8க்கு விற்றது ஸி4க்கும் விலை குறைந்து விட்டது.